(4) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 21(3) இன்படி கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் அரசினர் சட்ட முன்வடிவுகள் என்ற தலைப்பின்கீழ் உள்ளினங்கள் 8, 9, 10 ஆகியவற்றை," உள்ளினம் ஒன்றுக்குப் பிறகு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று" முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(6) அறிவிப்புகள்.

(அ) 1975 ஆம் ஆண்டு, சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1975 ஆம் ஆண்டு, சதர்ன் ஸ்டிரக்சுரல்ஸ் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன் வடிவை (சட்டமன்ற பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1975) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

(ஆ) 1975 ஆம் ஆண்டு, சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1975)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பேரவைத் தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டு, சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவை* (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1975) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முன்மொழிகிறேன்.

---

* 25—10—1975-ம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

1975 நவம்பர் 6] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

ரயில்வே வேகன்கள், ரயில் பெட்டிகள், எல்லா வகையான ரயில் என்ஜின்கள், வண்டிகள், பளு தூக்கி இயந்திரங்கள், ரயில்வே கட்டுமானப் பொருட்கள் அவைபோன்ற பிற பொருட்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதில் சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனம் பல ஆண்டுகளாக விரயத்தில் செயல்பட்டு வந்துள்ளது. இந்த நிறுவனத்தையே மூடும்படியான சூழ்நிலை உருவாகியது. இதில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கவும், நிறுவனத்தின் உற்பத்தி வசதிகளைத் திறம்படப் பயன்படுத்தவும் இந்த நிறுவனத்திற்கு தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு நிவாரணத் தொழில் நிறுவனங்கள் (சிறப்பு விதித்துறைகள்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1969) பயனை மாநில அரசு அளித்துள்ளது.

இந்நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவும், இதன் பங்குதாரர்களும் இந்நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பையும் 1971 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 8-ஆம் நாளன்று அரசிடம் ஒப்படைத்தனர். அன்று முதல் அரசு இந்நிறுவனத்தின் நிர்வாகத்தைத் தனது நியமனதாரர்கள் மூலமாக நிர்வகித்து வருகிறது. இந்நிறுவனத்திற்கு அரசு கணிசமான நிதியுதவியையும் அளித்துள்ளது. இந்நிறுவனத்தை விரிவுபடுத்துவதற்கு கணிசமான அளவுக்குப் புதிதாக முதலீடு செய்ய வேண்டியுள்ளதோடு இந்நிறுவனத்தின் மீது அரசு நிர்வாகக் கட்டுப்பாட்டைத் தொடர்ந்து செலுத்துவதற்கு வகை செய்யவும் வேண்டியுள்ளது. எனவே, இந்த நிறுவனத்தைக் கையகப்படுத்துவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன நோக்கத்தை எய்த விழைகிறது.

இதனை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இம் மாமன்றத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1975 ஆம் ஆண்டு. சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்ற பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1975) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 31 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டன.

திருமதி த. ந. அனந்தநாயகி: பில் மூவ் பண்ணி ஒருவரைக் கூட பேசவிடவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான்கு பில்களையும் 12-30 மணிக்கு முடித்துவிட்டுத்தான் பிறகு அர்பன் லேண்டு டாக்ஸ் பில்லுக்குப் போகவேண்டுமென்று ஏற்கெனவே முடிவு எடுத்திருக் கிறோம்.

அட்டவணை பேரவை முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: "1975 ஆம் ஆண்டு சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப் படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 39/1975) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(6) அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(ஆ) 1975 ஆம் ஆண்டு, லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1975-ஆம் ஆண்டு லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1975) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.